மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தலைவாசல் வரையில் நீட்டிக்கிற திட்டம் இல்லை. ஆத்தூர் வரையில்தான் திட்டம் இருக்கிறது. அதோடு எத்தனை பூஸ்டர் என்பதெல்லாம் டெக்னிக்கல் டீட்டெயில்ஸ். அதுபற்றிப் பார்த்துத்தான் சொல்லலாம். ஒவ்வொரு இடத்திலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறார்கள். எத்தனை கான்ட்ராக்டர்கள் என்பதைப் பொறுத்தவரையில் இனிமேல் டெண்டர் போடப்பட்டபிறகுதான் அதைப்பற்றிய விவரங்களை அறிவிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சைப் பகுதியில் அணுசக்தி தயாரிக்க கனிமங்கள்.

427—(* வினா எண் 10292) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சைப் பகுதியில் அணுசக்தி தயாரிக்கப் பயன்படும் கனிமங்கள் கிடைப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மோனஸைட் என்ற கனிமத்தில் உள்ள தோரியம் அணுசக்தி தயாரிக்க உபயோகிக்கப்படுகிறது. மோனசைட் என்ற கனிமம் தோரியம் ஆக்ஸைடுடன் கூடிய சீரியம் என்ற உலோக பாஸ்பேட்டாகும். இக்கனிமம், இல்மனைட், கார்னட், ரூடைல் சிர்கான் போன்ற கன கனிமங்களுடன் சிறிய அளவில் நாகூர், தரங்கம்பாடி, பூம்புகார், புதுப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் கிடைக்கின்றன. இக்கன கனிமங்கள் கடல் அலைகளினால் கடற்கரை மணலில் ஒதுக்கப்படுகின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மோனசைட் கனிமங்கள் நாகூர், பூம்புகார் போன்ற கடற்கரை ஓரங்களில் கிடைப்பதாக மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதனை அரசு எப்போது எடுப்பதற்கு முனைப்பாக இருக்கிறது? அதனால் ஏற்படுகிற பலன், அதன்மூலம் எவ்வளவு நமக்கு வருமானம் கிடைக்கும் என்பன போன்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தரங்கம்பாடி கடற்கரைப் பகுதியில் இந்தக் கனிமங்கள் கிடைக்கின்றன. ஆகவே விரிவான ஆய்வு ஒன்றை இலாக்கா மேற்கொண்டது. அதன்மூலமாக இந்தப் பகுதியில் 45 சதவிதம் கனிமங்கள் உள்ளதென்வும், மோனசைட் கனிமம் .35 சதவிதம் மட்டுமே இருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது. அதோடு தரங்கம்பாடி, பூம்புகார் கடற்கரைப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வின் மூலமாக அங்கே மோனசைட் என்ற கனிமம் .77 சதவிதம் முதல் .91 சதவிதம் வரையில் உள்ளதாக அறியப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே 108 கனிமங்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகூரிலிருந்து தரங்கம்பாடி மற்றும் பூம்புகார் கடற்கரைப் பகுதி வரையில் இந்த அணுசக்திக் கனிமங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளை எடுக்கின்ற முயற்சியை எப்போது அரசு துவங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே கிடைக்கின்ற கனிமம் ஒரு சதவீதத்தை விடக் குறைவாக இருப்பதால் தற்போது கன்னியாகுமரி மாவட்டத் திற்குப் பக்கத்தில்தான் அந்த வேலையை அரசு நடத்தி வருகிறது. அதிலும் மத்திய அரசுதான் அந்தத் தொழிற்சாலையை நடத்தி வருகிறது. தற்போது நாகூர் பகுதியில் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ள இயலவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு எல்லைப் பகுதியில் இத்தகைய தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கி இருப்பது அரசுக்குத்

தெரியுமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சிப் பகுதியில் இத்தகைய தொழிற்சாலை ஒன்றைத் தமிழக அரசு தொடங்குவதற்கான உத்தேசம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் ரேர் எர்த்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் அங்கே கனிமம் எடுத்துக்கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். ஆகவே தமிழக் அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் தற்போது இல்லை.

தமிழகத்தில், கஞ்சமலையில் இரும்பு கனிமங்களை வெட்டி எடுத்தல்.

428—(*வினா எண். 10393)—திரு. எஸ். இராசாராமன்:— மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கஞ்சமலையில் உள்ள இரும்பு கனிமங்களை வெட்டி எடுக்க அனுமதி கோரி மாநில அரசு மைய அரசிடம் விண்ணப்பித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறிடங்களில் இதுபோன்ற கனிமங்கள் கிடைப்பதாகத் தெரிய வருகிறது. அதுபற்றித் தமிழக அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற எல்லா கனிமங்களைப் பற்றியும் அரசு ஆய்ந்து அறிக்கை வைத்திருக்கிறது. அது எந்தக் கனிமம் என்று கேட்டால் அதுபற்றிய விவரங்களைத் தரத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.